# மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

## மீனவர்களுக்கு புதிய ஆழ்கடல் மீன்பிடி படகுகளை கட்டுவதற்கான நிதி உதவி





மகனே பாலு,
இப்போ எல்லாம், கரை பக்கத்துல மீன் கிடைக்கமாட்டுது. ஆழ் கடலுக்கு போக வேண்டி இருக்கு. நம்ம கிட்டயும் ஒரு பெரிய விசைப்படகு இருந்தா நல்லா இருக்கும். நாமும் ஆழ் கடலுக்கு போயி அதிகமா மீன் பிடிச்சுட்டு வரலாம்!






ஆமா அப்பா, நானும் அந்த யோசனைலதான் இருக்கேன். அந்த அந்தோணி அண்ணா, பெரிய விசைப்படகு கட்டறதுக்கு அரசு மானியம் தருவதா சொன்னாரு. நான் அத போயிட்டு விசாரிக்கிறேன்.

சரி பாலு
விசாரிச்சிட்டு வா.




விசைப்படகு உரிமையாளர் அந்தோணி
வா பாலு, என்ன விஷயம்
அண்ணா, புதிய ஆழ்கடல் விசைப்படகு கட்ட அரசு மானியம் தருதாமே, அத பத்தி கொஞ்சம் சொல்லுங்க, நாங்களும் விசைப்படகு வாங்கலாம்னு முடிவு பண்ணிருக்கோம்.
ஆமா, அரசு திட்டம் இருக்கு. நானும் அரசு திட்டத்துல தான் விசைப்படகு வாங்கினேன். சரி உனக்கு என்ன சந்தேகம் கேளு?


அரசு திட்டத்துல எவ்வளவு மானியம் தருவாங்க அந்தோணி அண்ணா ?
ஓர் படகுக்கான மொத்த அலகுத் தொகையான 120 இலட்சம் ரூபாய்ல பொதுப் பிரிவுக்கு 40% மானியத் தொகையா 48 இலட்சம் ரூபாய் வரையில பட்டியலின/ பழங்குடியினருக்கும் மற்றும் மகளிருக்கும் 60% மானியத் தொகையா 72 இலட்சம் ரூபாய் தராங்க பாலு.


எந்த ஆபீஸ்ல விண்ணப்பிக்கணும் அண்ணா !
நம்முடைய மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகம் தான்பா
சரி அண்ணா நான் போய் விண்ணப்பிக்கிற வேலைய ஆரம்பிக்கிறேன் ...



வா பாலு, என்ன
அந்த திட்டத்தை
பத்தின விவரத்தை
விசாரிச்சிட்டியா ??

நல்லா விவரமா
விசாரிச்சிட்டேன்
அப்பா நாம இந்த
வாரமே
விண்ணப்பிச்சிடலாம்





## மானியத்தில் விசைப்படகு பெற தகுதியுடையவர்கள்

- பாரம்பரிய மீனவர்கள் மற்றும் சங்கங்கள்/ கூட்டுறவு சங்கங்கள்/ சுய உதவிக் குழுக்கள்/ FFPOக்கள் போன்ற குழுக்கள்
- ஒரு குடும்பத்திற்கு ஒரு உறுப்பினர் மட்டுமே தகுதியானவர்கள்
- இணையவழி வழங்கப்பட்ட படகு பதிவுச் சான்றிதழ், மீன்பிடி உரிமம் மற்றும் மீனவர்களின் பயோமெட்ரிக் அடையாள அட்டை/ QR குறியீட்டு ஆதார் அட்டை ஆகியவற்றை வைத்திருக்க வேண்டும்.
- விசைப்படகு/ மீன்பிடி படகுகள் வைத்திருக்காத பாரம்பரிய மீனவர்கள்

## சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

- தொழில்நுட்ப–நிதி விவரங்களுடன் திட்ட அறிக்கை
- PMMSY இன் கீழ் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆழ்கடல் மீன்பிடி படகு வரைபடம்
- படகு பதிவுச்/ மீன்பிடி உரிமம் சான்றிதழ்
- ஆதார் அட்டை
- வங்கி கணக்கு புத்தகம்